# பூதான புரட்சிக்கு அறைகூவல்

ஜெயப்பிரகாஷ் நாராயண்

841
8-56
3- SEP 1956
MADRAS



ஞய பிரசுராலயம், தஞ்சாவூர்.

[விலை அணா 2.

# எமது பூதானப் பிரசுரங்கள்

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1 | பூதான உதயம்—வினோபா | ... 1 | 0 |
| 2 | பூதான ஜோதி—குமாரி விமலா தக்கர் | ... 2 | 0 |
| 3 | சர்வோதய பிரகடனம்—வினோபா | ... 2 | 0 |
| 4 | சம்பூர்த்தி தான யக்ஞம்—ஜாஜூ | ... 4 | 0 |
| 5 | பூதானத்தின் புரட்சித்தன்மை—தர்மாதிகாரி | ... 1 | 0 |
| 6 | ஜீவன் தானம்—ஜெயப்பிரகாஷ் நாராயண் | ... 1 | 0 |
| 7 | வினோபா வாழ்க்கை | ... 2 | 0 |
| 8 | வினோபாவின் குரல்— பூதானப் புரட்சி இதிஹாசம் | ... 8 | 0 |
| 9 | வணிகரே வாரீர்—வினோபா | ... 8 | 0 |
| 10 | கிராமங்களுக்கு ஆரோக்கியத் திட்டம்— வினோபா | ... 2 | 0 |
| 11 | ஒரு மாபெரும் அநீதி—நிலப்பிரச்னை— டால்ஸ்டாய் | ... 4 | 0 |
| 12 | பூதானப் பாடல்கள்— கவிஞர் இராமலிங்கம் பிள்ளை | ... 0 | 6 |
| 13 | பூதானமும் கிராம ராஜ்யமும்— சங்கர்ராவ் தேவ் | ... 1 | 0 |
| 14 | மனிதப் புரட்சி—தர்மாதிகாரி | ... 6 | 0 |
| 15 | பூதானப் புரட்சிக்கு அறைகூவல்— ஜெயப்பிரகாஷ் நாராயண் | ... 2 | 0 |
| 16 | தமிழ் நாட்டில் வினோபாஜியின் பிரவேசம் | ... 2 | 0 |
| 17 | சென்னை நகரில் வினோபாஜி | ... 8 | 0 |

எல்லா காதி வஸ்திராலயங்களிலும், பூ
ஊழியர்களிடமும் கிடைக்கும்

**சர்வோதய பிரசுராலயம், சீனிவாசபுர**

# வாலிபருக்கு அழைப்பு

பொதுவாக இந்தக் காலத்தில் நான் பார்ப்பது என்னவென்றால் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உள்ள மாணவர்களின் மனம் பொதுவுடமை வாதத்திலோ, சமூக வாதத்திலோ அல்லது மதம், ஜாதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாதங்களிலோ சென்றுகொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமை நாம் 1921—22ல், நம் வாலிப காலத்தில் கண்டதுண்டு. அப்பொழுது நாட்டில் காந்திப் புயல் எழ, அது வாலிபர்களை யெல்லாம் அள்ளிக் கொண்டு சென்றது. ஆனால் இன்றோ வாலிபர்கள் காந்திஜீயின் பேச்சை கர்னாடகமென்று சொல்லுகிறார்கள். இந்த விஞ்ஞான யுகத்தில் அணுகுண்டும் ரஷ்ய-சீன பொதுவுடைமையும் தோன்றியுள்ள காலத்தில், அவருடைய பேச்சு எடுபடாதென்று எண்ணுகிறார்கள்.

நான் பொதுவுடைமைத் தலைவர்களைப்பற்றியோ ஜாதி சமய வாதப் பிரமுகர்களைப்பற்றியோ ஒன்றும் சொல்லப்போவதில்லை. ஆனால் சமூக வாதம் அல்லது சோஷலிஸத்தைப்பற்றிச் சிறிது சொல்வேன். "உங்கள் அபிப்பிராயத்தில் சர்வோதயமும் சமூக வாதமும் ஒன்றே, இரண்டிற்கும் வேற்றுமையில்லை என்று சமாதானம் ஏற்பட்டு விட்டதா?" என்று என்னிடம் கேட்கப்பட்டது. சமூக வாதக் கருத்துள்ளவர்களான மாணவர்களின் முன் இந்தக் கேள்வி எழுகிறது. 'ஜயபிரகாஷ் சமூக வாதத்தை விட்டுவிட்டார், அவர் வழி தவறி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறார்' என்று சம்சயம் எழுந்திருக்கிறது.

## உண்மை சமூகவாதி சர்வோதய வாதியே

சமூகவாதம் எந்த லட்சியங்களைக் கொண்டுள்ளதோ அவற்றை நன்கு புரிந்துகொள்வீர்களானால், அதன் எட்டுத்

YZW M95 N56
68592



தத்துவங்களை சிறிது நேரம் மறந்து அதன் லட்சியங்களை மட்டும் கருத்தில்கொண்டு பார்ப்பீர்களானால் சமூகவாதமும் சர்வோதயமும் பரஸ்பரம் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் புரிந்து கொள்வதில் உங்களுக்கு சிரமமே இராது. சுரண்டலுக்கும் உயர்வு தாழ்வுக்கும் இடமேயில்லாத சமூகம் அமைய வேண்டுமென்பதே நம் விருப்பம். ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரமும் தன் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ளுவதற்குப் பூரண சந்தர்ப்பமும் கிடைக்கவேண்டும். ஆகவே இந்த லட்சியங்களை எய்துவது எப்படி என்ற பிரச்னை எழுகிறது. ஹிம்சையின் மூலம் இவற்றை அடைய முயன்ற இடங்களிலெல்லாம் இவை கைகூடாமல் போனது ஒரு புறமிருக்க, இங்கே சுரண்டலும் நிற்கவில்லை, உயர்வு தாழ்வும் ஒழியவில்லை; மக்களின் வளர்ச்சிக்குப் பூரண சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. ஹிம்சையின் மூலமாகப் புரட்சி நடந்த இடங்களில் கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாகவே முடிந்திருக்கிறது. நாம் பெரும்பாலும் புதிய சமூகத்தை உருவாக்குவதற்கு இப்பொழுதைய ஏற்பாட்டைக் கலைத்தல் ஒன்றே போதுமென்று எண்ணி விடுகின்றோம்! சமூகவாதிகள் முதலாளித்துவத்தை அகற்றிய உடனே புதிய சமூகம் உருவாகிவிடுமென்று எண்ணுகின்றார்கள். ஆனால் அவர்கள் இவ்வாறு எண்ணுவது தவறு. சமூகவாதம் வெறும் அழிக்கும் சக்தி ஒன்றைமட்டும் கொண்டு இயங்குவது அல்ல. உதாரணமாக, சமூக வாதத்தின் ஒரு தத்துவம் நாட்டின் உற்பத்தி ஸ்தாபனங்களைப் பொதுவுடைமையாக்குவது, பொதுச் சொத்தாக்குவது என்பதை எடுத்துக் கொள்வோம். ஆனால் இது ஒன்றிலேயே சமூகவாதம் உருவாகிவிடாது என்பதை நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் நாம் பார்த்து வருகின்றோம். ரஷ்யாவின் விஷயத்தை விட்டுவிடுங்கள். நம் ரயில்களெல்லாம் இன்று எல்லோருக்கும் சொந்தமாயுள்ளன. அவை ஏதோ ஒரு கம்பெனியின் சொத்தாயிருந்தது போய், நாட்டின் சொத்தாகி விட்டன. ஆனால் ரயிலின் நிர்வாகத்தில் சுரண்டல் இல்லை என்று சொல்வது தவறாகும். அதில் முதலாளித்துவம்

இல்லையென்றால் சமூக வாதமும் இல்லை, அதில் நடப்பது அதிகாரிகளின் ஆட்சியே. அவ்வாறே மற்ற தொழில்களையும் தேச உடைமையாக்குவதால் சமூகவாதம் ஏற்பட்டுவிடுமென்று சொல்லுவது ஏமாற்றத்திலேயே முடியும். எனவே நாம் லட்சியத்தை அடைவது எப்படி, லட்சியத்தில் போய்ச் சேருவது எப்படி என்ற கேள்வி நம் முன் நிற்கிறது. எந்தத் திசையை நோக்கி நாம் போகிறோமோ, நம் சிந்தனைகள் நம்மை எங்கே அழைத்தேகிக் கொண்டிருக்கின்றனவோ அதில் வெகு தொலைவை சர்வோதயம் ஏற்கனவே கடந்துவிட்டது. ஆகையால் நாம் உண்மையான சமூகவாதிகளாயின் உண்மையான சர்வோதயவாதிகளுமாவோம்.

## கிராம ராஜ்யம்

ஆட்சியில் பங்குகொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டென்று நாம் சொல்லுகிறோம். உண்மையான ஜனநாயகம் எவ்வாறு உருவாகும் என்பதைக் கூறப்புகுந்த வினோபாஜி இதற்கு நாம் கிராம ராஜ்யத்தை ஒப்பியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நாம் உண்மையான சமூகவாதிகளானால் கிராம ராஜ்யத்திற்கு நம் பூரண ஆதரவை வெளியிட்டாக வேண்டும். இவ்வாறு இரு கருத்துக்களும் இணைந்துபோகின்றன. அதிலிருந்து மிகுந்த சக்தி தோன்றும். நான் இம் மகாட்டிற்கு வந்ததையும், இதில் கலந்துகொள்வதையும், நான் வினோபாஜியைப் பின்பற்றுவதையும் குறித்து சிலர் ஏளனம் செய்ய, இன்னும் சிலர், "கடைசியில் வந்தீரா வழிக்கு!" என்று என்னிடம் கேட்கிறார்கள். ஆனால் இப்பொழுதோ அனைவருமே உண்மையாயும் ஆழ்ந்தும் துணிவுடனும் சிந்திக்கவேண்டிய சமயம் வந்திருக்கிறது. ஆகவே தன் லட்சியத்தை எய்துவதற்காக அல்லும் பகலும் பாடுபடும் எந்த சமூகவாதியின் நிலைமையும் என்னுடையது போன்றேதான் இருக்கும். ஆனால் சர்வோதய வாதிகளுக்கு எல்லா விஷயங்களும் முதலிலிருந்தே வெட்டவெளிச்சமாயிருந்தன. இதனால், இன்று அவர்கள் சொல்லுவது அவர்களுக்கு ஆரம்பம் முதலே தெரிந்ததுதான்

என்று கொள்ளக்கூடாது. காந்திஜி, வினோபாஜி ஆகிய இருவரையும் விட்டுவிடுவோம்; மற்ற அனைவரின் விஷயமும் வேறு. மேலே என்ன செய்வது, எங்கே போவது என்றே அவர்களுக்குப் புரியாதிருந்த காலமும் உண்டு. காந்திஜி இருந்தால் எதைச் செய்திருப்பாரோ அந்த சமூகத்தைத் திருத்தி அமைக்கும் பணியை காந்திஜியைச் சேர்ந்தவர்கள் செய்வார்களென்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் காந்திஜிக்குப் பிறகு எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. வினோபாஜி பூமிதான யக்ஞத்தைத் தொடங்கியிராவிட்டால், காந்திய வாதத்தையும் சர்வோதயத்தையும் நாம் மறந்தேபோயிருப்போம்; காந்தி தத்துவங்களில் நாம் நம்பிக்கையை இழந்திருப்போம்; சர்வோதய வேலையே தடைப்பட்டிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பூமிதான யக்ஞ வேலைத் திட்டத்தை நமக்கு அளித்ததன் மூலமாக வினோபாஜி நமக்குப் புத்துயிர் அளித்திருக்கிறார். இல்லையேல் நிர்மாண ஊழியர்கள் அவரவர் மூலையிலிருந்துகொண்டு ஏதோ எப்பொழுதும்போல் பெயருக்கு வேலை செய்துகொண்டிருப்பார்கள். அதனால் நாட்டிற்குச் சிறிது நன்மை விளையுமாயினும் 'காந்திஜியைச் சேர்ந்தவர்கள் நாட்டையே திருத்தி அமைக்க முயலப்போகிறார்கள்' என்று பொது மக்கள் எதிர்பார்த்தது நிறைவேறாமல் போவதோடு, நாட்டில் ரத்தக்களரி தோன்றி அதனால் விபரீத விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

ஆகையால், நம் லட்சியத்தை எய்துவதற்கு நாம் இந்த வழியை அனுசரிக்க வேண்டும். மமதையையும் நம்மைச் சேர்ந்தவர்களிடமுள்ள பாசத்தையும் ஒழித்துவிட்டு நாம் வேலைசெய்ய வேண்டும்.

## சமூகவாதத்திற்குப் பதில் சர்வோதயம்

நான் இந்த விஷயங்களையெல்லாம் மாணவர்களிடம் வேண்டுமென்றேதான் சொல்லுகிறேன். ஏனெனில், அவர்களின்முன் இதே கேள்வி தோன்றி மூளையை குழப்பிக்கொண்டிருக்கிறது.

நாம் ஏதோ வழி தவறித் தடுமாறுவதாக அவர்களுக்குத் தோன்றுகிறது. நாம் இப்பொழுது உண்மையான நம் லட்சியங்களைக் கண்முன்கொண்டு அவைகளை அடையப் பாடுபட வேண்டும். நாம் கொண்டுள்ள லட்சியங்களையே வேறு சிலரும் கொண்டிருந்தபோதிலும், அவற்றை எய்துவதற்கு நாம் கையாளும் முறைகள் வேறு, அவர்களுடைய முறைகள் வேறு. அந்த லட்சியம் சுரண்டலற்ற சமூகத்தை அமைப்பதாயிருந்து, அதை ஹிம்சையின் மூலமாக அடைவதானால் நம் லட்சியம் கைகூடாது. ஹிம்சை புதுவகைச் சுரண்டலையே தோற்றுவிக்கும். சுரண்டல் என்றால் தனிநபருக்குள்ள உரிமை மறுக்கப்படுதல் என்பதே. சுரண்டல் அறவே ஒழிந்துவிடுமென்று நான் சொல்லவில்லை. இன்று நமது வாழ்க்கைத்தரம் நம் ஏழை எளிய சகோதரர்களின் வாழ்க்கையுடன் ஒப்பிடும்பொழுது உயர்ந்தே இருப்பதால் நாம் அவர்களைச் சுரண்டுகிறோம் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் எல்லோரும் இப்பொழுது கல்வி பயின்று வருகிறீர்கள். உங்கள் பெற்றோரும் பெரியோரும் உங்கள் கல்விக்காகச் செலவு செய்து வருகிறார்கள். இவ்வாறு ஏழை எளியோர் தம் குழந்தைகளின் கல்விக்குச் செலவு செய்ய இயலாதாகையால் நீங்களும் சுரண்டலில் பங்குகொள்கிறவர்கள்தான். சுரண்டலில் அறவே ஒழிவதென்பது ஒருக்கால் அசாத்தியமாகலாம். ஆனால் நாம் அந்த லட்சியத்தையே நோக்கி முன்னேற வேண்டும்; நம் வரம்பையும் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

ரஷ்யாவிலும், உயர்ந்த சம்பளத்திற்கும் தாழ்ந்த சம்பளத்திற்கும் நாற்பது பங்கு வித்தியாசம் இருக்கிறது; உயர்ந்த உத்தியோகஸ்தர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தே இருக்கிறது. எனவே அங்கே சுரண்டல் நீங்கிவிடவில்லை. ஹிம்சையின் மூலமாக அவர்கள் அதிகாரம்பெற்றார்களாகையால் அந்த ஹிம்சையைக்கொண்டே உற்பத்தியில் எவ்வளவு பகுதி யார் யாருக்குச் சேரவேண்டும் என்பதையும் அவர்கள் நிர்ணயிக்கிறார்கள். உண்மையான சுரண்ட

லற்ற சமுதாயமோ அஹிம்சையின் மூலமாகவோ அமைக்கக்கூடும். ஆகையால் நாம் சமூகவாதம் என்ற பெயரை விட்டுவிட்டு சர்வோதய மென்ற பெயரை ஏற்பதில் எனக்கு ஆக்ஷேபணை இல்லை.

## தர்மகர்த்தா தத்துவம்

என்னிடம் தர்மகர்த்தா தத்துவத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். 1935ல் காந்திஜி உத்தரப் பிரதேசத்திற்குச் சென்றிருந்த பொழுது அவ்விடத்திய ஜமீன்தார்கள் அவரைப் போய்க் கண்டு. "இப்பொழுது காங்கிரஸ்—சோஷலிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டிருக்கிறதே, இனி எங்கள் கதி என்ன ஆகுமோ?" என்று கேட்டார்கள். அதற்கு காந்திஜி, "காங்கிரஸ் சமூகவாதிகளின் ஆதிக்கத்தில் போய்விட்டால் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் தர்மகர்த்தாக்களைப்போல், நடந்து கொள்வீர்களானால் உங்கள் அழிவை நான் அனுமதிக்கமாட்டேன்" என்று சொன்னார். அந்த சமயத்தில் இதைக் கேட்டு நான் மிகவும் கோப முற்றேன் என் தோழர்களிடம், காந்திஜி சொல்வதைக் கேட்டீர்களா? ஏழை எளியோரை நசுக்கிப் பிழியும் இந்த ஜமீன்தார்களுக்கா இவர் இப்படி அபயமளிப்பது? அவர்களை இவர் 'டிரஸ்டி' களாக வேண்டுமென்றும், நீங்கள் அழிவதைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்' என்றும் சொல்லுகிறாரே, இதற்கு அர்த்தம் அவர்கள் டிரஸ்டிகளாக ஆகப்போவது மில்லை, காந்திஜி அவர்களை அழிக்க இடம் கொடுக்கப்போவது மில்லை" என்றேன். அந்தக் காலத்தில் 'இந்த டிரஸ்டி'த் தத்துவமெல்லாம் ஏட்டில் எழுதுவதோடு சரி, காரியத்தில் ஒன்றும் நடக்கப் போவதில்லை' என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் இன்றோ கயாவில் ஒரு 'பீகா' ஆயிரம், நாலாயிரம், ஆறாயிரமென்று விலை போகக்கூடிய நிலத்தை ஜனங்கள் தயக்கமின்றி தானம் வழங்கி வருவதை பார்க்கிறேன், அங்கே 48 ஆயிரம் ஏக்கர் நிலம் தானமளிக்கப் பட்டிருக்கிறது. இதை இப்போது நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

காந்திஜியின் கருத்துக்களைப் பற்றி கிஷோரிலால் பாய் ஒரு சமயம், அவைகளையெல்லாம் பேச்சளவோடு இருக்க வேண்டியவையே தவிர காரியத்தில் நிறைவேறப் போவதில்லை என்று நாம் நினைக்கிறோமே, அது தவறு. காந்திஜி ஜமீன்தார்களை, தனவந்தர்களை, 'நீங்கள் உங்கள் சொத்துக்கு வெறும் நிர்வாகிகளைப் போல், டிரஸ்டிகளைப்போல், நடந்துகொள்ளுங்கள்' என்று சொல்லுகிறாரே, (அவர்களுக்கு நல்ல புத்தி இராவிட்டால்) அவர்கள் அவ்வாறு ஒன்றும் செய்யப் போவதில்லை. சமூகத்தின் அமைப்பும் அதிலுள்ள ஏழ்மையும் இப்பொழுதுள்ளதைப்போல் என்றும் இருந்துதான் வரும் என்று இவ்வகையில் நாம் காந்திஜியைக் கருதுவோமானால் பெரிய பிழை செய்வதாகும்" என்று எழுதினார். இன்று காந்திஜி இருப்பாரானால் வினோபாஜி தொடங்கியுள்ள பணியை அவர் தாமே தொடங்கியிருப்பார். இவ்வளவு காலம் பொறுக்காமல் இதற்கு முன்பே தொடங்கியிருக்கலாம். அவர் இதைச் செய்யும் முறையும் இன்னும் சிறந்ததாய், நேர்ந்ததாய், இருக்கும். "டிரஸ்டிகள் ஆவதற்குச் சித்தமாயுள்ளவர்கள் அவ்வாறு வெளியிட்டுச் சொல்லட்டும். அவர்களுக்குச் சம்மதமில்லையானால் நாம் ஏழைகளை ஆயத்தம் செய்வோம். தாங்கள் சுரண்டப்படுவதற்குத் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டாமென்று ஏழைகளுக்குச் சொல்லுவோம். இவ்வாறு இரு தரப்பாரையும் ஆயத்தம் செய்வோம்" என்று காந்திஜி சொல்லி வந்தார். அவ்வாறு பூமிதான யக்ஞத்திலும், நிலம் அளிப்போரும் பெறுவோருமாகிய இரு சாராரும் ஆயத்தமாகி வருவதை நாம் பார்க்கிறோம். பூமிதான யக்ஞம் எந்த கிராமங்களில் பரவுகிறதோ அங்கெல்லாம் உள்ள சுரண்டப்படும் எளியோரிடையே விழிப்பு ஏற்படுவதால், அவர்கள் அஹிம்சை முறையில் சுரண்டலை எதிர்ப்பது பற்றிச் சிந்திப்பார்கள். ஆகவே, டிரஸ்டி தத்துவம் வெறும் ஏட்டுச் சுரைக்காய், அது ஒருபோதும் நடைபெறப் போவதில்லை என்று சொல்லி ஒதுக்குவோமானால் அது தவறு சமூகவாதிகளும் போரைப்பற்றி எண்ணும்பொழுது எவ்வாறு எண்ணுகிறார்கள்?

யாட்டாளிகள் கையில் துப்பாக்கியோ குண்டோ கிடையாதாகை யால் அவர்கள் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும், அதனால் முதலாளித்துவக் கோட்டை தகர்ந்து விடும் என்றும், அதில் ஒரு சிறிது ஹிம்சை ஏற்பட்டால் பாதகமில்லை என்றும் எண்ணுகிறார்கள்.

## புரட்சி வந்து விட்டது!

எனக்கு இன்று வாலிபர்களைப் பார்க்கும்பொழுது நான் பாட்னு கல்லூரியில் கல்வி பயின்று வந்த காலம் நினைவுக்கு வரு கிறது. அப்பொழுது மௌலானு அபுல்கலாம் ஆஸாத் பாட்னுவுக்கு வந்திருந்தார். அவருடைய ஒத்துழையாமைப் பிரசங்கத்தை நான் கேட்டேன். அதன் விளைவாகவே நாங்கள் அனைவரும் கல்லூரி பகிஷ்காரம் செய்தோம். அக்காலத்தில் காந்திஜியின் அழைப்பு நினைவுக்கு வருகிறது. அக்காலத்தில் வாலிபர்களின் மனதில் தோன்றிய புரட்சிக்கு காந்திஜியின் இயக்கம் எந்த அளவுக்குக் காரணமானதோ அந்த அளவுக்கு வேறு எதையும் சொல்ல முடி யாது. இன்றும் அதே வகைப் புரட்சி நடைபெறவிருக்கிறது. நேற்று வினோபாஜியின் * உபன்யாசம் நடந்ததே, அதைப்போன்ற அழகிய உபன்யாசத்தை நான் இன்று வரையில் கேட்டதேயில்லை. அவர் இயக்கத்தை தத்துவ நோக்குடன் விளக்கிக் கூறினார். எவர் அறிவில் அவர் கூறியது புகுந்ததோ அவருடைய வாழ்க்கை மாறாதிருக்க முடியாது. இன்று வாலிபர்களுடன் எனக்குச் சிறிது தொடர்பு இருந்து வருவதால் அவர்களுடைய நிலைமையைப் பார்க்கையில் எனக்குப் பெருத்த ஏமாற்றமே ஏற்படுகிறது. அவர் களுக்கு உற்சாகமென்னவோ இருக்கிறது; ஆனால் நல்ல விஷயத் தில் சிரத்தையோ, உறுதியோ, கருத்தாழமோ இருப்பதாகத்

---

* சாண்டில் சர்வோதய சம்மேளனத்தில் வினோபாஜி 7–3–'55ல் செய்த உபந்யாசத்தை "சர்வோதயப் பிரகடனம்" என்று வெளியிட்டுள்ளோம். பிரதி அணு 2 (சர்வோதய பிரசுராலயம்).

தோன்றவில்லை. உங்கள் அறிவிலும் உள்ளத்திலும் சர்வோதய தத்துவம் பதிந்திருக்குமானால் நான் இங்கே குறிப்பிட்ட இந்தக் குறைபாடுகள் நீங்கி உங்களுக்குக் கடமையுணர்ச்சி ஏற்பட வேண்டும். அதனால் உங்களுக்கு எவ்வளவு நன்மையுண்டோ அவ்வளவு சமூகத்திற்கும் உண்டாகும். "பூதான யக்ஞ வேலையில் நீங்கள் இறங்காவிட்டாலும் கல்லூரியை விட்டு வந்து விடுங்கள்" என்று விநோபாஜி சொல்லியிருக்கிறார். அவரைப் போன்ற ஒரு மகா வித்வானுக்கு படிப்பில் துவேஷம் தோன்றுவதற்குக் காரணமில்லை. அப்படியானால் அவர் ஏன் இவ்வாறு செய்தல் வேண்டும்? ஏனென்றால், இன்று அளிக்கப்படும் கல்வியிருக்கிறதே அதனால் மாணவர்களுக்கோ, சமூகத்திற்கோ, நாட்டிற்கோ நன்மை எதுவும் ஏற்படவில்லை என்பதனாலேயே இன்றைய நிலை இவ்வாறிருக்கிறது. இதில் நாம் நம் கடமையை நோக்கி எவ்வளவு முன்னேற முடியுமோ அவ்வளவு முன்னேறுவதற்கு முயல வேண்டும்.

## இவ் வேலைக்கு ஒரு வருஷம்

விநோபாஜி ஒரு கருத்தின் அடிப்படையில் சர்வோதய சமாஜமென்று ஒரு கோஷ்டியைச் சேர்த்திருப்பதைப்போல் நீங்களும் செய்துகொண்டு, வேலையை நிறைவேற்றிவைக்கும் பொறுப்புள்ள செயல் குழுவொன்றை அமைத்துக் கொள்ளலாம். 1921-ல் நாம் எதைக் கண்டோமோ, அதே காலம் இன்று வந்திருக்கிறது. ஒரு புரட்சி நடந்துகொண்டிருக்கிறது. நாம் அதில் கலந்துகொள்ள வேண்டும். அதற்கென்று நம்மைச் சித்தம் செய்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு வருஷ காலத்திற்கு உங்கள் படிப்பையெல்லாம் கட்டி வைத்துவிட்டு, கிராமம் கிராமமாகச் சுற்றி, பூமிதான யக்ஞத்திற்கு உங்களாலான உதவியை அளிப்பதன் மூலம் இந்தப் புரட்சியை வெற்றி பெறச்செய்ய முயலுவதென உறுதி செய்துகொள்ள வேண்டும்—இது என் விருப்பம்.

## அமெரிக்காவில் எனது அனுபவம்

ஒரு வருஷம் கல்லூரியை விடுவதில் உங்களுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்? நான் அமெரிக்காவில் எத்தனையோ மாணவர்கள் ஒரு 'டர்ம்' (term) கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் படித்துவிட்டு, ஒரு 'டர்ம்' ஏதேனும் தொழில் செய்து பணம் சம்பாதிப்பதைப் பார்த்திருக்கிறேன். நான் அப்பொழுது பொதுவுடமைக்காரனுகி, ரஷ்யாவுக்குப் போக எண்ணியிருந்ததால் பிரயாணச் செலவுக்குப் பணம் சேர்ப்பதற்காக கல்லூரியைவிட்டு ஏதேனும் வேலை கிடைக்குமா என்று தேடலானேன். ஆனல் அப்பொழுது அங்கே 'தொழில் மந்த' மாகையால் எங்கும் வேலையின்மை பரவிக்கொண்டிருந்தது. நான் ஒவ்வொருநாளும் எந்த வேலை கிடைத்தாலும் செய்யச் சித்தமாய் அலைந்து பார்த்தும் வேலை எதுவுமே கிடைக்கவில்லை. அதன்பிறகு நான் நோயுற்றுப் படுத்துவிட்டேன். அதனல் வைத்தியச் செலவுவேறு ஏற்பட்டுவிடவே கடன் வாங்க வேண்டியதாயிற்று. ஆனல் பிறகு வேலைசெய்து சம்பாதித்து அதையெல்லாம் கொடுத்துத் தீர்த்தேன். இப்பொழுது நினைத்துப் பார்க்கையில், ஒரு வருஷம் கல்லூரியை விட்டதனல் எனக்குப் பெரிய நஷ்டமெதுவும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. வயல்களிலும் தொழிற்சாலைகளிலும் நான் பெற்ற படிப்பு குறைந்த மதிப்புள்ளதென்று எனக்கு என்றுமே தோன்றியதில்லை. எனக்கு அங்கு ஏற்பட்ட அனுபவம் கல்லூரிகளில் ஏற்பட்டிருக்கவே முடியாது. இவ்வாறே நீங்கள் கிராமங்களில் பெறக்கூடிய கல்வியை கல்லூரிகளில் பெறமுடியாது. உங்கள் பெற்ருேர் உங்கள் எதிர் காலத்தைச் சிறப்புடன் விளங்கச் செய்ய விரும்புகிருர்களென்ருல், உங்கள் அறிவாற்றல்களை வளர்ப்பதில் அவர்களுக்கு விருப்பம் உண்டென்ருல், "நல்லது குழந்தாய்! ஒரு வருஷம் போய் வேலை செய். அதுதான் சரி" என்றே சொல்வார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களை இந்த பூமிதான யக்ஞ வேலையில் ஒரு வருஷத்திற்கு அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் பூமியை தானம்

கொடுக்கிறார்களென்றால் நீங்களும் நானும் நம் நேரத்தை, நம் வாழ்வின் ஒரு பகுதியை அளிப்போம்.

வினோபாஜி இந்த நிலப் பிரசினை ஜனசக்தியின் மூலமாகத் தீர்ந்தால் அது ஒரு புரட்சிக் காரியமாய் உலகத்திற்கே ஒரு உதாரணமாக அமையுமென்று சொல்லியிருக்கிறார். இன்று பூமியைப் பற்றிய பெரிய பிரசினையை பீஹாரில் ஒரு வருஷத்திற்குள் தீர்க்க முடியுமானால் அதனால் மிகவும் சிறந்த விளைவுகள் எற்படும். ஆகையால் இந்தப் புரட்சியின் பொருட்டு நான் உங்களை அழைப்பதுடன், வாலிபர்கள் இந்த வழியை எற்பார்களென்றும் நம்புகிறேன்.

68592

YZW M95
N56

# பூதான புரட்சிக்கு வாருங்கள்

சர்வோதய சமாஜத்திற்கு நான் புதிதாக வந்தவன் இருந்தாலும், சர்வோதய அறிவாளிகளின் முன்பு சில பிரசினைகளைக் கூற விரும்புகிறேன்.

சமூகத்தின் அமைப்பை மாற்றவேண்டுமென்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். சர்வோதய சமுதாயத்தைக் கூடிய அளவு சீக்கிரமாக நிர்மாணிக்க விரும்புகிறோம். நம் தேசத்தில் சர்வோதய சமுதாயத்தை எப்படி அமைப்பது? மகாத்மா காந்தி நம்மிடை இருந்திருந்தால் அவர் ஓர் வழியைக் காண்பித்திருப்பார். அவருடைய தலைமையில் சுதந்திரத்திற்காக நாம் எல்லோரும் பாடு பட்டோம், சுதந்திரத்தை அடைந்தோம். நமக்கு சுதந்திரம் கிடைத்த பின்பு அவருடைய சிஷ்யர்கள் தேசத்தின் அரசாங்கத்தை ஏற்று நடத்தி வருகிறார்கள். அது முதல் காந்திஜி எண்ணிய ஓர் சமுதாயத்தை, சட்டம் மூலமோ, அரசியல் அதிகாரம்மூலமோ, அல்லது அரசியல் தலைவராலோ சாதிக்க முடியுமா என்று சிந்தனை செய்துகொண்டு வருகிறேன்.

## சர்வோதய சமுதாயத்தை எப்படி அமைப்பது?

சுதந்திரத்திற்குப் பிறகு தேசம் முழுவதும் டில்லியை நோக்கிய வண்ணமாயிருக்கிறது. அரசாங்கத்தின் அதிகாரத்தால் சர்வோதய சமுதாயத்தை அமைக்க முடியும் என்று உங்களில் எவ்வளவு பேர்கள் எண்ணுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. என் சம்பந்தப்பட்டவரை, டில்லியை நோக்கிக் கொண்டிருப்பது காந்திய வழியல்ல என்று அதிகமாக உணர்ந்து வருகிறேன். டில்லியில் பொதுவாக ஜனநாயக முறையைக் காண்கிறோம். அதில் ஒரு ஆளும் கட்சி, ஒரு எதிர்ப்புக் கட்சி, தேர்தல்கள், மெஜாரிட்டி கட்சியின் ஆட்சி, முதலியவற்றைப் பார்க்கிறோம். ஆனால் சட்டம்

களினுலோ. அரசாங்கத்தின் அதிகாரத்தாலோ, சர்வோதய சமுதாயத்தை நாம் அமைக்க முடியாதென்று ஜனங்கள் அதிகமாக உணர்ந்து வருகிருர்கள். ஒருவேளை அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு பொதுவுடமை சமுதாயத்தை நிர்மாணிக்கக்கூடும். ஆனுல் சர்வோதய சமுதாயத்தை உருவாக்க அதனுல் முடியாது என்பது நிச்சயம்,

ஆகவே, நம்முன் உள்ள பிரசினை சர்வோதய சமுதாயத்தை எப்படி அமைப்பது? இதற்கு யார் பொறுப்பேற்பார்கள்? இதற்குப் பின் சட்டம் தொடர்ந்து வரக்கூடும். ஆனுல் இதன் முன்னணியில் யார் இருப்பார்கள்?

## நிர்மாண திட்டத்தால் மட்டும் புரட்சி ஏற்படாது

சில வருஷங்களுக்கு முன்புவரை நிர்மாணத் திட்டம் மூலம் தான் எல்லாம் சாத்தியமாகும் என்று சொல்லி வந்தோம். சுதந்திரத்திற்குப் பின்பு நிர்மாண வேலை பின்னணிக்குப் போய்விட்டது. சர்க்காருக்குப்பின் இருந்துகொண்டு நூற்பு, ஆதாரக்கல்வி முதலிய திட்டங்களை நடத்தலாம் என்று நிர்மாண வேலையில் ஈடுபட்டவர்கள் எண்ணினுர்கள். ஆனுல் இதன் மூலம் சமூகம் மாறிவிடும் என்று ஒரு நிர்மாண ஊழியரும் மனப்பூர்வமாக நம்பவில்லை. நூற்பும், ஆதாரக்கல்வியும் பூரணமாக பரவிய கிராமங்கள் பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனுல் அந்த கிராமங்களின் சமூக அமைப்பில் எள்ளளவுகூட ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆதலால், நிர்மாண ஊழியர்களின் மனதில் குழப்பமும், ஏமாற்றமும் ஏற்பட்டது இயற்கையே. நிர்மாண ஊழியர்களுக்கு முன்னுல் இது தீராத பிரசினையாக இன்றும் நிற்கிறது. இதைத் தீர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்யப்பட்டன. எவ்வளவோ விதத்தில் கருத்துக்கள் தோன்றுகின்றன; ஆனுல் அவைகள் தெளிவான வழியைக் காட்டக்கூடியதாயில்லை.

அரசாங்க வர்க்கத்திலும் சர்வோதய சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களும், சர்வோதய சமுதாயத்தை நிர்மாணிப்பதில் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கிறார்கள்.

## சமுதாயத்தை மாற்ற எனது தாபம்

இவைகளைப்பற்றி யோசிக்கும்பொழுது நான் சில முடிவுகளுக்கு வந்துள்ளேன். இவைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். "ஜெயப்ரகாஷின் வாழ்க்கையில் அவருடைய கருத்துக்கள் அடிக்கடி மாறுகின்றன. நாளை அவர் என்ன சொல்லுவார் என்று யாரும் சொல்ல முடியாது", என்று எனது நண்பர்களில் பலர் சொல்லுகிறார்கள். என் கருத்துக்கள் அடிக்கடி மாறுகின்றன என்று ஒப்புக்கொள்கிறேன். என் உள்ளத்தில் ஒரு அக்னி இடைவிடாது எரிந்துகொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அநீதியையும், சுரண்டலையும் ஆதாரமாகக்கொண்ட இன்றுள்ள சமுதாயத்தை மாற்ற வேண்டும் என்ற ஒரு பெரிய அக்னி தஹித்துக் கொண்டிருக்கிறது. சமத்துவமும், பூரண சுதந்திரமும் உள்ள புதிய சமுதாயத்தை நாம் அமைத்தாக வேண்டும்.

## ரஷ்யாவில் சுதந்திரமும் சமத்துவமும் எங்கே?

இருபத்தைந்து வருஷம் முன்பு நான் அமெரிக்காவில் இருந்தேன்; கம்யூனிஸ்டாக திரும்பினேன். ஆனால், நான் கற்பனை செய்துகொண்ட ஸ்வப்பன உலகம் தவறானது என்று சீக்கிரத்தில் தெளிவாக உணர்ந்தேன். ஒரு பெரிய தேசத்தில் உயர்ந்த தலைவர்களின் கீழ் நடந்த ஓர் பெரும் சோதனை பலனற்றதாய் போனதை உணர்ந்தேன். உலகத்தில் ஆறில் ஒரு பாகமான ரஷ்யாவில் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட முடியவில்லை. இந்த சோதனையின் பயனாக ஏற்பட்டது எனக்கு திருப்தியளிக்கவில்லை. இன்று ரஷ்யா அதே நிலைமையில்தான்

உள்ளது. ரஷ்யாவில் ஓர் உண்மையான புரட்சி ஏற்படும்வரையில் அந்த தேசத்தின் மக்களுக்கு விமோசனம் ஏற்படாது.

பொதுவுடைமையுடன் சேர்ந்து ஜனநாயகமும் இராவிட்டால் நம்முடைய நோக்கம் நிறைவேறாது என்று உணர்கிறேன். ஒவ்வொருவருக்கும் சமசந்தர்ப்பம் கிடைக்காதவரையில் ஜன சமுதாயம் முன்னேற வழியில்லை என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. துரிதமாக நமது சமூகத்தில் மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்று நாம் எப்பொழுதும் விரும்புகிறோம்.

## சர்வோதயத்தில் எனது நம்பிக்கை

சில வருஷங்களாக சர்வோதயத்தின்மூலமே நம் லக்ஷியத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. ஆனால் இந்த லக்ஷியத்திற்கான வழியையும் மார்க்கத்தையும் அடைய முயன்றுகொண்டிருந்தேன். பூதானயக்ஞம் வளர்ந்து வருவதைப் பார்த்தபொழுது எனக்கு வழி தெளிவாகப் புலப்பட்டது. ஆகவே, இறுதியில் புத்த கயாவில், அரசியலை எல்லாம் விட்டுவிட்டு இந்தப் பணியில் என்னை அர்ப்பணம் செய்துகொள்ள முடிவு செய்தேன். சர்வோதய சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் எல்லோரும் இந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நிலைமை தெளிவாகிவிட்டது. அரசாங்க அதிகாரத்தின் மூலம் சர்வோதயத்தை ஸ்தாபிக்க முடியாவிட்டால், அரசாங்க யந்திரத்தால் சமூகத்தில் அஹிம்சா புரட்சி சாத்தியமில்லையானால், புதிய சமுதாயத்தை அமைக்க வேறு என்ன வழி நமக்கு உள்ளது? திரும்பத் திரும்ப சிந்தனை செய்ததின் பலனாக எனக்குக் கிடைத்துள்ள முடிவுகளை உங்களுக்குக் கூறுகிறேன்.

## காந்தீய புரட்சி உலகத்திற்கு புதுமை

மகாத்மாஜியின் முறையில், சமூகத்தை மாற்றும் மார்க்கம் முற்றிலும் புதியது. உலகத்தில் இதுவரையில் ஒருவரும் இந்த வழியில் முயற்சி செய்யவில்லை. நமது தேசப் பிதா காட்டிய சித்தாந்தத்தின் ஆதாரத்தின்பேரில் விநோபாஜி அந்த வழியைப் பின்பற்றி அதை ஒரு சாஸ்திரமாகச் செய்வதில் வெற்றி கண்டு வருகிறார். இன்று காலை (25–3–55) விநோபாஜி அதைப்பற்றி விபரமாகப் பேசியுள்ளார்.

## சத்தியத்தில் ஆக்கிரஹம்

சத்திய மனோபாவத்தைப் பரப்ப என்ன வழி? பொது மக்கள் சத்தியத்தை வற்புறுத்தும் ஆக்கிரகத்தை உருவாக்கும் வழி என்ன? இவற்றைப் பிரசாரம் செய்யவே பூதானம், சம்பத்து தானம் முதலிய கருத்துக்களை விநோபாஜி நமக்குக் கொடுத்திருக்கிறார். இதைவிட வேறு நல்ல வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

## நிலமும் சொத்தும் தனிமனிதனுடையதல்ல

பூதானத்தில் நமக்கு எவ்வளவு நிலம் கிடைத்ததென்பது அடிப்படை பிரச்னை அல்ல. நிலம் சமூகத்தைச் சேர்ந்தது, ஒரு சொத்தும் தனி மனிதனுடையதல்ல, என்ற கருத்து அதிக ஜனங்களால் ஒப்புக்கொள்ளப்படுவதா என்பதுதான் முக்கிய விஷயம். பூதானமும் சம்பத்து தானமும் புரட்சிகர மகத்துவம் வாய்ந்தவை. அவைகளின் தத்துவங்களை நம் மக்கள் அதிக அளவில் ஏற்று வருகிறார்கள்.

நம்முடைய கருத்துக்களை பிரசுரங்கள் மூலமாகவும், பிரசங்கங்கள் மூலமாகவும் பரப்பக்கூடும். ஆனால் மக்களின் ஜீவனில் உண்மையான மாறுதல்களைச் செய்யாதவரையில் சமூகப் புரட்சிக்கான இயக்கம் மக்களின் இயக்கமாக ஆக முடியாது.

உப்பு சத்தியாக்ரஹத்தைப் பற்றிய ஞாபகம் எனக்கு வருகிறது. இந்த நூதன வழியை காந்திஜி கண்டபொழுது அதைப் பரிகசித்து நகையாடியவர்கள் பலர் இருந்தனர். ஆனால் அந்தச் சிறு உப்பு சத்தியாக்ரஹம் தேசத்தையே மாற்றிவிட்டது. வெள்ளையரின் சாம்ராஜ்யத்தைக் கண்டு நடுங்கிய இந்திய ஜனங்களின் பயம் நீங்கி அவர்கள் தைரியசாலியானார்கள். ஏறக்குறைய அதேபோல் பூதான இயக்கம் இன்று சமூகத்தை மாற்றி வருகிறது.

## பூதானமே ஓர் புரட்சி

இந்த சமூகத்தை மாற்றுவதற்கு பூதான இயக்கத்தை ஓர் நல்ல இயக்கமாக பலர் கருதுகிறார்கள். தேசத்தில் நடந்துவரும் பல நல்ல வேலைகளில் பூதானம் ஒன்று என்று அவர்கள் எண்ணினால், இந்த இயக்கத்தின் பூரண தத்துவத்தை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை என்று நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பல நல்ல வேலைகளில் பூதானமும் ஒன்று என்று எண்ணினால் பூதானத்திலிருந்து ஒரு பலனும் ஏற்படாது. மற்றவை அவசியமோ, நல்லதோ இல்லை என்ற பொருள் இல்லை. நம்முடைய சக்தி எல்லாவற்றையும் பூதானத்தில் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

புரட்சிக் காலங்களில், மற்ற எல்லா வேலையையும் விட்டுவிட்டு புரட்சி வேலையில் நம் முழு சக்தியையும் பிரயோகிப்பது போல இந்த இயக்கத்தில் நாம் குதித்துவிட வேண்டும்.

நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்தக் கருத்துப் புரட்சியை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். சமூகத்தில் ஒரு பொருளாதாரப் புரட்சி ஏற்பட வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் உணரும்படி செய்ய வேண்டும். பெரும்பான்மையான மக்களுக்கு பொருளாதார பிரச்னை தான் முக்கியமானது. சமூகத்தை மாற்றும் நோக்கத்தில் பொருளாதார பிரச்னையை விநோபாஜி எடுத்துக்கொண்டிருக்கிறார். பொருளா

தார பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய அஹிம்சா வழியை அவர் உபதேசித்து வருகிறார்.

சென்ற நான்கு வருஷ காலமாக, இந்த விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசித்த பிறகு என் கருத்துக்களை உங்களுக்குச் சொல்லத் துணிந்தேன். உங்களுடைய எல்லா வேலைகளையும் பதவிகளையும் விட்டுவிட்டு சமூகத்தில் இந்த அஹிம்சா புரட்சியில் ஈடுபடவேண்டுமென்று உங்களை அழைக்கிறேன். இது கிராமக் கைத்தொழிலை அடிப்படையாகக்கொண்டு பூதானத்தின் மூலம் ஏற்படும் அஹிம்சா புரட்சி.

## அஹிம்சையில் உறுதி

ஒரு அஹிம்சா சமுதாயத்தை ஏற்படுத்த நாம் அஹிம்சையில் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். பூதானத்தின் விசேஷப்பொருள் என்ன? எல்லா வேலைகளுக்கும் இது மத்தியமாக ஏற்பட்டிருப்பதன் காரணம் என்ன? நமது பழைய நிர்மாணத் திட்டங்களால் ஒரு அஹிம்சா புரட்சி ஏற்படுத்த முடியாதென்று நாம் உணர்ந்துவிட்டோம். ஆதலால்தான் இந்தப் பிரச்னை எழுந்துள்ளது.

## நூற்ற கிராமத்தில் புரட்சி இல்லையே

சென்ற 25 வருஷங்களாக நூற்றுவந்த கிராமங்கள் பல உள்ளன. ஆனால் அங்கு மக்களின் வாழ்க்கையில் ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை. நூற்று வந்தவர்களுக்கு ஏதோ கொஞ்சம் பணம் கூலியாகக் கிடைத்திருக்கலாம். ஆனால் கிராமத்தில் ஒரு புரட்சியும் ஏற்படவில்லை.

பல கிராமங்களில் ஆதாரக் கல்வியும் முன்னேறியிருந்தது. ஆனால் கிராம வாழ்க்கையில் ஒருவித மாறுதலையும் அதன்மூலம் கொண்டுவர முடியவில்லை,

பூதான இயக்கமோ சென்ற நான்கு வருஷமாக வளர்ந்து வருகிறது. நமக்கு 35 லக்ஷம் ஏகரா நிலம் கிடைத்துள்ளது. ஒரிஸ்ஸா மாகாணத்தில் சுமார் 110 கிராமங்களை பூரணமாக பூதானத்திற்கே ஜனங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த கிராமங்களிலெல்லாம் நிலப்புரட்சி பூர்த்தியாகிவிட்டதென்பதே இதன் பொருள். இந்த கிராமவாசிகள் தங்களுடைய நில உரிமையை முழுவதும் விட்டுவிட்டார்கள்.

## பூதானமின்றி நிர்மாண வேலை பரவாது

நமது அனுபவத்தில், பூதான யக்ஞம் முன்னேறுகிற அளவில் தான் நிர்மாண வேலைகளும் முன்னேறுகின்றன. அப்பொழுது தான் மக்களின் உற்பத்தி சக்தியும் ஆக்க சக்தியும் பெருகுகிறது. பூதான இயக்கம் பூர்த்தியான கிராமங்களில் நாம் செய்யவேண்டிய ஏராளமான வேலையை எண்ணும்பொழுது இதற்கு வேண்டிய அளவு தொண்டர்கள் கிடைப்பதுகூட கஷ்டமாயிருக்கும்.

## கருத்துப் புரட்சி

மக்களின் சிந்தனையில், கருத்தில் ஓர் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே முக்கியமான விஷயம். சட்டங்கள் மூலமோ, சட்டசபைகள் மூலமோ இது ஏற்படக்கூடியதல்ல, நம் அனுபவத்தில் ஓர் இறுதிக் கருத்தை பின்பற்றவேண்டிய ஒரு கட்டத்திற்கு வந்துவிட்டோம். அதுதான் பூதானமும் சம்பத்துதானமும். தன்னுடைய சொத்து உரிமையை முழுமையாக தியாகம் செய்யத் தயாராயிருப்பவர் ஒவ்வொருவரும், முழுவதும் கொடுக்க முடியாமல் ஒரு பாகமாவது கொடுப்பவரும் பங்கு எடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித புரட்சிக் கருத்துக்கள் தேசத்தில் பரவ வேண்டும்.

## லெனின் சொன்னதும் ரஷியா செய்வதும்

ஹிம்சா புரட்சிக்கும் அஹிம்சா புரட்சிக்கும் அதிக வித்தியாசம் உண்டு. அறிவு படைத்தவர்களுடைய மன எழுச்சியின்

ஆதாரத்தைக்கொண்டே அஹிம்சா இயக்கம் நடைபெறும். அஹிம்சா புரட்சி சாஸ்திரத்தில், மக்களின் கருத்துக்களை மாற்றுவதும், சமூகத்தில் மனிதனின் நடத்தை முறையை மாற்றுவதும் மிக முக்கியம் வாய்ந்தவை.

ஹிம்சா புரட்சியில் அரசாங்க யந்திரமும் அதன் படையுமே முக்கியமானவை. சோவியத் யூனியனில், புரட்சிக்குப்பிறகு பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் உயிருக்காக பயந்து ஓடினார்கள். அவர்கள் விட்டுப்போன நிலத்தைக் குடியானவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். ஆனால் ஜன சமூகத்தின் மதிப்புள்ள அடிப்படையில் மாறவில்லை. "என் சொத்தா" அல்லது "உன் சொத்தா" என்ற பிரச்னை மட்டுமே இருந்தது. ஆகையினால் குவியல்முறை விவசாயப்பண்ணை நடத்த அரசாங்கம் தலைப்பட்டபொழுது, ஏழை விவசாயிகள் தங்கள் தங்கள் சொத்துரிமையை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. இந்த மாறுதலைச் செய்ய மக்கள் கொடுமையான கஷ்டத்திற்குள்ளானார்கள். பரம்பரையாக தாங்கள் பாடுபட்டுவந்த நிலத்திலிருந்து சுமார் இரண்டு கோடி விவசாயிகள் அப்புறப்படுத்தப்பட்டு சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டார்கள். வர்க்க வேற்றுமைகளை மூட்டிவிட்டு பகைமை மூலமாக சர்வோதய சமுதாயத்தை ஏற்படுத்த முடியாது. ரஷ்யாவில் இன்று என்ன பார்க்கிறோம்? அதிகாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் சம்பளத்தில் ஒரு வித்தியாசமும் இராது என்று லெனின் அன்று சொன்னார். ஆனால், சோவியத் அரசாங்கத்தில் தொழிலாளி சம்பளத்திற்கும் அதிகாரியின் சம்பளத்திற்கும் எண்பது மடங்குவித்தியாசம் உள்ளது.

புரட்சி பூர்த்தியானவுடன் அரசாங்கம் நசித்துக் கரைந்து போகும் என்று லெனின் சொன்னார். ஆனால் இன்றோ, ரஷ்யாவின் அரசாங்கம் அளவு கடந்த அளவில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு வளர்ந்துவிட்டது.

## சர்வோதயத்திற்கு ஜனசக்தியே ஆதாரம்

இப்பொழுது முடிவு தெளிவாகிவிட்டது. அரசாங்கத்தின் பலத்தை வளர்த்து அதன்மூலம் ஒன்றையும் சாதிக்க முடியாதென்று தெளிவாய் விட்டது. ஜன சக்தியையும் அவர்களுடைய தார்மிக சக்தியையும் வளர்க்கும் முறையே உத்தமமான மார்க்கமாகும். "பொதுநல சர்க்கார்" என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. "பொதுநல சர்க்கார்" என்ற சொல்லில் பல்வேறு கருத்துக்களும் சேர்ந்து குழம்பியிருக்கிறதை சர்வோதய ஊழியர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சமூகத்தைப் பொதுவுடைமையாகச் செய்ய மெதுவாக ஊர்ந்து போகும் கொள்கையாகும்.

## எல்லா வேலையையும் விட்டு வாருங்கள்

இதர பல்வேறு திட்டங்களில் பூதான இயக்கமும் ஒன்று என்று நாம் கருதவில்லை. இன்று இது ஒன்றே விநோபாஜிக்கு ஏற்பட்ட வரப்பிரசாதம், சமூகப் புரட்சியை ஏற்படுத்த அவர் ஓர் நிமித்தகாரணமாகிவிட்டார். இந்தப் பணிக்கு வேண்டிய சக்தியை எல்லாம் கடவுள் விநோபாஜிக்குக் கொடுத்துள்ளார். எது என்னவாயிருந்தாலும், சாவகாசமாக வேலை செய்வதன்மூலம் ஒரு புரட்சியும் பூர்த்தியாவதில்லை. புரட்சி வேண்டுமானால் இன்னும் அதி வேகமாக உழைக்கவேண்டும். உண்மையாக, அந்தரங்கத்தில் சர்வோதய லக்ஷியத்தில் நம்பிக்கையுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் வகிக்கும் அரசாங்க பதவிகளையும் அந்த வேலைகளையும் விட்டுவிட்டு இந்த இயக்கத்தில் பூரணமாகப் பாடுபடும்படி அழைக்கிறேன். அதுபோலவே பல்வேறு நிர்மாண வேலையில் ஈடுபட்டிருக்கும் நிர்மாண ஊழியர்கள் தங்கள் தங்கள் கடைகளையும் ஸ்தாபனங்களையும் மூடிவிட்டு இந்த இந்திய சமுதாயப் புரட்சியில் குதிக்கும்படி அழைக்கிறேன்.

# ஆத்மீக ஜனசக்தியைத் திரட்டுவோம்

ஸ்ரீ ஜெயப்ரகாஷ் நாராயண் அவர்கள் சர்வோதய சம்மேளனத்தில் 28—5—56 நீண்ட பிரசங்கம் செய்தார் மிக உருக்கமாகப் பேசினார். பாபாவின் மூன்று நாள் உபவாசத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் கண்ணீர் விட்டார். அவர் பேசியதின் சாரத்தை இங்கு தருகிறோம்.

---

விநோபாஜியின் உருக்கமான உணர்ச்சியூட்டும் பிரசங்கத்தை இன்று கேட்டோம். இம்மாதிரி சம்மேளனத்தில் பேச வாய்ப்பு கிடைப்பதே பாக்கியம். ஒருவருக்கொருவர் அபிப்பிராயங்களையே பரிமாறிக்கொண்டு உண்மை நிலையை உணரவே கூடி இருக்கிறோம். அரசியல் மகாநாடு என்றால் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்ளலாம்.

## புது உணர்ச்சி உதயம்

பூதான இயக்கம் நாட்டில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வளர்த்து வருகிறது. பலரின் பல ரக கருத்துக்களைக் கேட்டு ஆய்ந்து பார்க்கும் நிலைமை நாட்டில் ஏற்பட்டு வருகிறது.

1957 முடிவுக்குள் 5 கோடி ஏகரா நிலதானம் பெற்று, நில விநியோகம் செய்து புரட்சியை ஏற்படுத்திவிட நாம் விரும்புகிறோம். இப்போது ஐந்து வருஷங்களாகி விட்டன. ஒரு வருஷமே பாக்கியிருக்கிறது. ஊழியர்களுக்கு ஒருவித நிராசையும் அவநம்பிக்கையும் ஏற்படுகிறது. இது அனுவசியமானது. பீஹாரில் பூதானம் வெற்றி கண்டுள்ளது. அங்குபோல் இதர ராஜ்யங்களிலும் ஏற்பட்டுவிட்டசல் நாம் எதிர்பார்க்கும் அளவு வெற்றியை குறிப்பிட்ட காலத்தில் கண்டுவிட முடியும்.

## 800 கிராமங்கள் தானம்

ஒரிஸ்ஸாவில் கிராம தானம் ஏற்பட்டது. நிலப் புரட்சியில் இரண்டாவது கட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. 800 கிராமங்கள்

கிராம தானமாகக் கிடைத்துள்ளன. அது இயக்கத்திற்கு புதுப் பொலிவை உண்டாக்கிவிட்டது. புது பரிசோதனையும் நடந்து வருகிறது. 800 கிராம தானம் கிடைத்ததுபோல் இதர ஜில்லாக் களில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் கிடைத்துவிட்டால் நிலப் புரட்சி பூர்த்திபெறும்.

இந்த கிராமதான இயக்க உருவக அடிப்படையில் கிராம ராஜ்ய அமைப்பு இயக்கம் தமிழ்நாட்டில் இப்போது பூர்த்தியாகு மென எதிர்பார்க்கிறோம். இங்கு வினோபாஜியின் யாத்திரை இதற்கு உற்சாகத்தை எற்படுத்தும் என்பது நிச்சயம்.

## இளைஞர் இயக்கம்

வியாபாரிகள், தொழிலாளிகள் அரசாங்கம் எல்லா தரப்பிலும் சூழ்நிலை சாதகமாகவே இருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று கலந்துகொண்ட அளவுக்கு நேருஜி, ராஜன் பாபு, ஆஜாத் இதர தலைவர்கள் இந்த இயக்கத்தில் கலந்துகொள்ள வில்லை. இது குற்றம் சாட்டக் கூறப்பட்டதல்ல. வினோபாஜி தவிர இந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் இளைஞர் களே. அவர்களை ஒன்று திரட்டி கூட்டாக இயக்கம் நடத்தி வெற்றிபெற பரீட்சை இப்போது நடக்கிறது.

இந்த ஊழியர்கள் உற்சாகமாக வேலை செய்வதைப் பொறுத்தே லட்சியம் பூர்த்தியாவது இருக்கிறது. ஒரு இயக்கம் பெரியதென்று பீதியடையக் காரணமில்லை. நல்லதை நாம் எடுத்து நடத்தினால் மக்கள் ஆதரவு கட்டாயம் கிடைக்கும். இதற்கான சூழ்நிலை சாதகமாயிருக்கிறது.

நம்முடைய சங்கல்பம் தேசிய சங்கல்பம். இதை வெற்றி பெறச் செய்வது ஒவ்வொருவரின் கடமையாகும். காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகள் இயக்கத்தை வரவேற்றுள்ளன. இயக்கத்தை வெற்றிபெறச் செய்வது அவர்கள் பொறுப்பாகவும் இருக்கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் பூரா சக்தியையும் உபயோகித்து இயக்கத்தை வெற்றிகாணச் செய்யவேண்டும். சர்க்கார் என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும், இது நம் வேலை என்று ஊழியர்கள் மேற்கொள்ளவேண்டும். நிலப் புரட்சியை மக்களிடமிருந்து தான் விநோபாஜி எதிர்பார்க்கிறார். சர்க்காரிடமிருந்து அல்ல.

## சர்க்காருக்கு வேண்டுகோள்

5 வருஷ காலமாக மழை பனி வெய்யில் பாராமல் விநோபாஜி புனித யாத்திரை செய்து வருகிறார். இதை வெற்றிபெறச் செய்யும் பொறுப்பு சர்க்காருக்குமுண்டு. ராஜ்ய சர்க்கார்கள் தங்களிடமுள்ள புறம்போக்கு நிலங்களை வினியோகிக்க ஏற்பாடு செய்யலாம். இத்துடன் பூதான இயக்கத்தில் கிடைத்த நில வினியோகமும் சேர்ந்தால் நம் லட்சியம் குறித்த காலத்தில் பூர்த்தியாகிவிடும்.

1957-ல் முடிக்க வேண்டுமென்பதால் நாம் எதையும் வேகமாகச் செய்யவேண்டும். விநோபாஜியிடம் எதையும் வாங்கிச் செல்ல நாம் இங்கு வரவில்லை. அவரிடம் நமக்குக் கொடுக்க மந்திரம் எதுவுமில்லை. அவரிடம் இருக்கும் மந்திரம் எல்லாரிடமும் இருப்பதே. ஊழியர்கள் அனைவரும் தங்கள் முழு சக்தியையும் உபயோகித்து அவர் காட்டியுள்ள முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் நிலைபற்றி ஆத்ம சோதனை செய்துகொள்ள வேண்டும். நாம் நம் முழு சக்தியை உபயோகித்து நம் கடமையை இயக்கத்திற்கு செய்துள்ளோமா? நான் இதர வேலைகளை விட்டுவிட்டிருக்கிறேன். ஆனால் என்னால் முடிந்ததையெல்லாம் இயக்கத்திற்கு செய்துள்ளேனா? இல்லை. இன்னும் செய்திருக்கலாம். ஊழியர்களும் அப்படி தங்கள் மனதை சோதனை செய்துகொண்டு பார்க்கவேண்டும். நாம் சுத்தமாக இருந்தால் அதிகம் செய்ய முடியும். ஆத்ம சக்தியே முக்கியம். அதன்மூலம்தான் சங்கல்பம் பூர்த்தியாகும்.

## வினோபாஜி உண்ணாவிரதம்

தம் ஆத்ம சுத்திக்காக மூன்று தினங்கள் வினோபாஜி உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்துள்ளார். அவர் உடல் நிலையை இது பாதிக்காதா? உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி நாம் அவரைக் கோரவேண்டும். யாருக்கும் அவர் முடிவு தெரியாது. முடிவை மாற்றுவதற்கில்லை யென்றால் அந்த மூன்று தினங்களில் பாத யாத்திரை செய்யக்கூடாது என்று கோரவேண்டும் அதை அவரும் எற்கவேண்டும்.

அவர் கடும் தவத்தை மேற்கொள்ளப் போகிறார். இதற்கான பொறுப்பின் பாரம் நம் அனைவரின்மீது மிருக்கிறது.

(வினோபாஜி உண்ணாவிரதம்பற்றி ஸ்ரீ ஜெயப்ரகாஷ் உருக்கமாகக் குறிப்பிட்டார். துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ள இரு முறை அழுதேவிட்டார். பின்னர் சமாளித்துக்கொண்டு தொடர்ந்து பேசினார்.)

மகாத்மா ஆத்ம சுத்தி செய்துகொண்டது அனைவருக்கும் தெரியும், நம் குறைகள் நமக்கு மனதில் கொர்தளிப்பை ஏற்படுத்துகிறது. வாழ்க்கையைச் சரிப்படுத்திக்கொண்டு தூய்மையாக நடந்தால் இக்காரியம் வெற்றி அடையும். புது உபாயத்தை இப்போது நாம் வினோபாஜியிடம் கேட்க வழியில்லை. அவர் சொன்ன வழியை பூர்ண சக்தியுடன் அமல் நடத்தப் பார்க்க வேண்டும்.

## மக்கள் முன்வர வேண்டும்

வினோபாஜி கூறுவது காந்திய கருத்தே. அதை அனைவரும் உணரவேண்டும். பூதான தத்துவ அடிப்படை இயக்கம். இதை ஊழியர்கள் அனைவரும் நன்குணர வேண்டும். அவரது உணர்ச்சி இயக்கமாக இதை கருதிவிடக்கூடாது. ஏழைகள் விவசாயிகள் ஆதரவு சூழ்நிலை சாதகமாயிருக்கிறது. பீஹாரில் ஒரு கட்டத்தில் 7500 எக்கா நிலம் கிடைத்தது. மாணவர்கள் தங்களுக்கு

வந்த பணத்தில் ஒரு பங்கை தானமாகக் கொடுக்க முன்வந்தனர் என்பது பாராட்டுதற் குரியது. ஆகவே சூழ்நிலை மிகவும் சாதக மாகவே இருக்கிறது. நம் குறைகளைப் போக்கிக்கொள்வதை நாம் கவனிக்கவேண்டும்.

நிலப் புரட்சியை மக்கள் இயக்கமாக அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற நிலை நல்லதே. மக்களிடம் நமக்கு நம்பிக்கை ஏற் படவேண்டும். இதற்கு ஸ்தாபனம் தேவை என்ற கருத்தைச் சிலர் கொண்டுள்ளனர்.

## நகர மக்களுக்கு

பலாத்காரம் நகரப் புறங்களில்தான் அதிகமாக இருக்கிறது. நாம் நகரப் பகுதிகளை அணுகவேயில்லை. அங்கு புத்திசாலிகள் இருக்கின்றனர். பூதான இயக்கம் கிராம இயக்கமென்று நினைக் கின்றனர். இது தவறு என்பதை அவர்கள் அறியச் செய்ய வேண்டும். சம்பத்துதானம் உடலுழைப்புதானம் ஜீவன்தானம் போன்றதில் யாரும் ஈடுபடலாம். பல சோதனைகள் நடந்து வரு வது நகர மக்களுக்குச் சரியாகத் தெரியாது. மத்திய பிரதேசத் தில் தேர்ந்தெடுத்த சில இடங்களில் இவை நடந்து வருகின்றன. கூட்டாக வேலை செய்வது என்பதே இப்பரீக்ஷையாகும்.

## ஜனசக்தியே ஆத்ம பலம்

நாட்டுப்புறங்களில் நிலச்சொந்தக்காரன், விவசாயிகளிடையே மனக்கசப்பு இருக்கிறது. நிலமற்றவர்களைத் திரட்டி ஆதரிக்க ஏன் முயற்சிக்கவில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் மக்கள் சக்தியைத் திரட்டி மனப்பான்மையை மாற்றுவதுதான் முக்கியமானது. அதுதான் எங்கள் அடிப்படை நிலை. ஜனசக்தி தான் தார்மீக பலமளிப்பது. அதுதான் நல்ல சக்தி. பணக் காரர்கள் மனதை மாற்ற முடியுமா என்று இடதுசாரிகள் கேட் கிறார்கள். உடனடியாக மாற்றிவிட முடியாதுதான். ஆனால் அவர்கள் கொடுக்காமல் இல்லை.

ஆனல், முக்கியமாக நாங்கள் கோருவது மனமாற்றம். சொத்துடைமை உரிமை, அது என்னுடையது என்று நினைக்கும் நிலை போகவேண்டும். ஏழைகளிடமும் இது மறையவேண்டும். இதை முதலில் ஏழைகள் விடுவது நல்லது. இயக்கத்திற்கு ஆதரவு தருவோர் இந்த சொத்துரிமை மனப்பான்மையை விட்டால் பணக்காரரும் விடும் நிலை ஏற்படும். ரஷியாவில், சீனவில் புரட்சிகள் ஏற்பட்டன. ஆனல் வெற்றி ஏற்படவில்லை. ரஷியா புரட்சி சரித்திரத்தில் பெரிது. அவை வெற்றி பெறவில்லை. சமத்துவ நிலை ஏற்படவில்லை. பலதரப்பட்ட வேலை எல்லோரிடையேயுள்ள ஊதிய பாகுபாட்டைப் போக்க முடியாதென்கிருர்கள் அவர்கள். இது அசமத்துவ நிலையை நீடிக்கச் செய்வதே. லெனின் தத்துவம் எப்படியென்ருல் ஒரு இன்ஜினீயர் சம்பளம் தொழிலாளர் ஊதியத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கக் கூடாதென்பது. இந்தப் பணத்தாசை நிலையை ஸ்டாலினும் ஒழிக்க முடியவில்லை.

## புற மாற்றமும் அக மாற்றமும்

ஒருவர் சொத்தைப் பறித்து விநியோகிப்பதுதான் புரட்சி என்று கருதப்படுகிறது. ஆனல், இதனல் நன்மை ஏற்படவில்லை. மக்கள் மன மாறுதலே முக்கியம். அதற்காக வினேபாஜீ அரும் பாடுபட்டு வருகிருர்.


இந்த இயக்கம் மேலேயிருந்து கட்டளைமீது வருவதல்ல. அகத்திலிருந்து அரும்புவது. ஜீவன்தான இயக்கம் பரவலாக வேண்டும். 50,000 பேராவது இதில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஓரிரு நல்ல உண்மையான ஊழியர்களாவது ஏற்படவேண்டும். அதுதான் நமக்கு உண்மையான சக்தி.

★

68592
4ZWM95
N56

2C
ச/3/9

# சர்வோதய—பூதான இலக்கியத்திற்கு



ஆச்சார்ய வினோபா

சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை—2,000